# ரூ. 500 மற்றும் ரூ. 1000 மதிப்பிலக்க நோட்டுகள் சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டன (அறிவுப்பு வெளியான தேதி நவம்பர் 08, 2016)

**1. இத்திட்டம் ஏன் அறிமுகப்படுத்தப்பட்டது?**

உயர் மதிப்பிலக்க நோட்டுகளில் கள்ளநோட்டுகளின் புழக்கம் அதிகரித்துள்ளது. இந்த கள்ளநோட்டுகளில் பாதுகாப்பு அம்சங்கள் இல்லாதபோதிலும், இவை உண்மையான ரூபாய் நோட்டுகளைப் போலவே சாதாரண மக்களுக்கு காட்சியளிக்கின்றன. இந்த கள்ளநோட்டுகள் சமூக விரோத, தேச விரோத செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன். கருப்புப் பணத்தைப் பதுக்கி வைக்கவும், இந்த உயர்மதிப்பிலக்க நோட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் பணப் பரிவர்த்தனைகள் அதிக அளவில் இருப்பதால் கள்ளநோட்டுகளின் பிரச்சனை தொடர்கிறது. கள்ள நோட்டுகளின் புழக்கம், கருப்புபண பதுக்கல் இவற்றை ஒழித்திட இத்திட்டம் அறிமுகம் செய்யப்படுகிறது.

**2. இத்திட்டத்தின் விவரம் என்ன?**

இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டு, நவம்பர் 08, 2016 வரை புழக்கத்திலிருந்த ரூ. 500 மற்றும் ரூ. 1000 மதிப்பிலக்க நோட்டுகள் (இவை 'குறிப்பட்ட வங்கி நோட்டுகள்' என்றே பின்வரும் இடங்களில் சுட்டிக்காட்டப்படும்) சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுகின்றன. இதன் விளைவாக பரிவரித்தனை நடத்தவோ, வருங்காலப் பயன்பாட்டிற்காக பாதுகாத்து வைக்கவோ இவை மதிப்பற்றவை ஆகிவிட்டன. இந்தக் குறிப்பட்ட வங்கி நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கியின் 19 அலுவலகங்களிலோ அல்லது ஏதாவது வங்கிக் கிளையிலோ, தலைமை அஞ்சல் அலுவலகம் அல்லது கிளை அஞ்சல் அலுவலகத்திலோ மாற்றிக்கொள்ளலாம்.

**3. இந்த நோட்டுகளுக்கு எவ்வளவு மதிப்பு எனக்குக் கிடைக்கும்?**

நீங்கள் வங்கிக்கிளைகள் / இந்திய ரிசர்வ் வங்கி அலுவலகங்களில் அளிக்கும் நோட்டுகளின் மொத்த மதிப்பையும் நீங்கள் பெறமுடியும்.

**4. அனைத்தும் எனக்குப் பணமாகவே கிடைக்குமா?**

இல்லை. நீங்கள் எவ்வளவு நோட்டுகளை அளித்தாலும், ஒருவருக்கு ரூ. 4,000 வரை மட்டுமே ரொக்கமாக வழங்கப்படும். மீதித்தொகை உங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**5. நான் அனைத்தையுமே ரொக்கமாக வங்கியிடம் கொடுக்கும்போது எனக்கு ஏன் ரொக்கமாகவே மாற்றித் தரக்கூடாது?**

இத்திட்டத்தின் நோக்கத்தைக் கருத்தில் கொள்வதால் இதற்கு அதில் இடமில்லை.

**6. ரூ. 4000 எனக்குப் போதாது, நான் என்ன செய்வது?**

உங்கள் வங்கிக் கணக்கிலிருக்கும் பனத்தைப் பயன்படுத்தும் வகையில் காசோலை அல்லது மின்னணு நிதிமாற்றம் மூலம் உங்கள், பட்டுவாடாக்களை / செலவுகளை செய்து

கொள்ளலாம். இணையதள வங்கி / மொபைல் வாலட் / IMPS / கடன் / பற்று அட்டை ஆகியவைகளை உபயோகிக்கலாம்.

**7. எனக்கு வங்கிக் கணக்கு இல்லையென்றால் என்ன செய்வது?**

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் KYC நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான சான்றாவணங்களுடன் அருகிலுள்ள வங்கிக் கிளையை அணுகி கணக்குத் தொடங்கலாம்.

**8. எனக்கு ஜன் தன் யோஜனா கணக்கு மட்டும்தான் உள்ளதென்றால் நான் என்ன செய்வது?**

ஜன் தன் யோஜனா கணக்கு வைத்துள்ள நபர். அத்தகு கணக்கிலுள்ள வரம்புகளுக்குட்பட்டு, நடைமுறைகளைப் பின்பற்றி நோட்டுகளை மாற்றிக்கொள்ளும் வசதிகளைப் பெறலாம்.

**9. நான் நோட்டுகளை எங்கு மாற்றிக்கொள்ளலாம்?**

இந்திய ரிசர்வ் வங்கியின் அனைத்து வழங்கல் அலுவலகங்கள், வணிக வங்கிகளின் கிளைகள் / பிராந்திய கிராமப்புற வங்கிகள் / நகரக்கூட்டுறவு வங்கிகள் / மாநில கூட்டுறவு வங்கிகள், தலைமை / கிளை அஞ்சல் அலுவலகங்கள் இவை எங்கு வேண்டுமானாலும் நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

**10. நான் என்னுடைய வங்கிக் கிளைக்குத்தான் போக வேண்டுமா?**

ரூ. 4000 வரை முகப்பில் மாற்றிக்கொள்ள நீங்கள் அடையாள சான்றாவணத்துடன் எந்தவொரு வங்கிக்கிளையையும் அணுகலாம். ரூ. 4000-த்திற்கும் அதிகமாக இருப்பின் அவற்றை உங்கள் வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்ய நீங்கள் கணக்கு வைத்துள்ள வங்கிக்கு அல்லது அதன் கிளைக்கோ போகலாம். ஒருவேளை இதற்காக நீங்கள் வேறெரு வங்கிக்குப் போக நேரிட்டால், உங்களின் அடையாளச் சான்றாவணம், வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்து அந்த தொகையைக் கணக்கில் மின்னணு நிதிமாற்றம் மூலம் வரவு வைக்க ஏற்பாடு செய்யலாம்.

**11. நான் எனது வங்கியின் எந்தக் கிளைக்கு வேண்டுமானாலும் போகலாமா?**

ஆம். உங்கள் வங்கியின் எந்தக் கிளையையும் அணுகலாம்.

**12. நான் வேறொரு வங்கிக் கிளைக்குப் போகலாமா?**

ஆம். நீங்கள் வேறொரு வங்கிக் கிளைக்கும் போகலாம். அப்போது நீங்கள் உங்களின் அடையாளச் சான்றாவணத்தைக் காட்டி ரொக்கமாகப் பெறலாம். மாற்றிக்கொள்ளும் தொகை ரூ. 4000-க்கும் அதிகமாக இருந்தால், அடையாளச் சான்றாவணத்துடன் ங்கள் வங்கிக் கணக்கு விவரத்தை அளித்தால், மின்னணு நிதிமாற்றம் மூலம் கணக்கில் வரவு வைக்கமுடியும்.

**13. எனக்கு வங்கிக் கணக்கு இல்லை. ஆனால் எனது நணபருக்கு / உறவினருக்கு கணக்கு உள்ளது. அதன்மூலம் நோட்டுக்களை மாற்றிக்கொள்ள முடியுமா?**

ஆம். அந்த நண்பரோ, உறவினரோ எழுத்து வடிவில் உங்களுக்கு இதற்கு அனுமதி அளித்திருந்தால் முடியும். அத்துடன் உங்களின் அடையாளச் சான்றாவணத்தையும் காட்டி நீங்கள் நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

14. **நான் வங்கிக்கு நேரில் போக வேண்டுமா? அல்லது எனது பிரதிநிதியாக யாரையாவது அனுப்ப முடியுமா?**

நேரில் வங்கிக்கு செல்வது சிறப்பானது. ஒருவேளை உங்களால் போக முடியாதபட்சத்தில் உங்கள் சார்பில், எழுத்துமூலம் அதிகாரமளித்து வேறொருவரை வங்கிக்கு அனுப்பலாம். அந்தப் பிரதிநிதிக்கு அதிகாரமளிக்கும் கடிதத்துடன், தனது அடையாளச் சான்றாவணத்தையும் வங்கியிடம் காட்டி நோட்டுகளை மாற்றலாம்.

**15. தானியங்கி பணம் வழங்கும் எந்திரத்திலிருந்து பணம் எடுக்கமுடியுமா?**

ATM-களின் கணிப்புக் கூறுகளை மாற்றியமைக்க சிறிது காலம் பிடிக்கும். ATM-கள் தயார்நிலை அடைந்ததும் நவம்பர் 18, 2016 வரை நாளொன்றுக்கு ஒரு அட்டைக்கு ரூ. 2000 வரை எடுக்கலாம். நவம்பர் 19, 2016-க்குப் பிறகு இந்த வரம்பு ரூ. 4000 ஆக உயர்த்தப்படும்.

**16. காசோலைக்கு எதிராக ரொக்கத்தைப் பெறமுடியுமா?**

ஆம். நீங்கள் பணம் எடுக்கும் சீட்டு அல்லது காசோலை மூலமாக, ஒரு நாளைக்கு ரூ. 10,000 வரை ஒட்டுமொத்தமாக ஒரு வாரத்திற்கு ரூ. 20,000 வரை (ATM-களில் எடுத்த பணத்தையும் சேர்த்து) நவம்பர் 24, 2016 வரை எடுக்கமுடியும். பின்னர் இந்த வரம்புகள் மறு ஆய்வு செய்து மாற்றப்படலாம்.

17. **ATM-கள், பணம் ஏற்கும் / சுழற்சி எந்திரங்கள் மூலம் இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வங்கியில் டெபாசிட் செய்யமுடியுமா?**

ஆம். இந்த குறிப்பிட்ட நோட்டுகளை பணம் ஏற்கும் / சுழற்சி எந்திரங்கள் ATM-கள் மூலம் டெபாசிட் செய்யலாம்.

**18. மின்னணு நிதிமாற்றம் (NEFT / RTGS / IMPS / Internet Banking / Mobile Banking, etc.) முறைகளை இதற்குப் பயன்படுத்தமுடியுமா?**

நீங்கள் NEFT / RTGS / IMPS / Internet Banking / Mobile Banking போன்ற என்த பணம்சாரா பட்டுவாடா முறையையும் இப்போது பயன்படுத்தலாம்.

**19. இந்த நோட்டுகளை மாற்ற எனக்கு எவ்வளவு கால அவகாசம் உள்ளது?**

இத்திட்டம் டிசம்பர் 30, 2016 உடன் முடிவடைகிறது. டிசம்பர் 30, 2016 வரை இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வணிகவங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியில் மாற்றிக்கொள்ளலாம்.

**20. தற்சமயம் நான் இந்தியாவில் இல்லை. நான் என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் இந்தியாவில் இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வைத்திருந்தால், எழுத்துப்பூர்வமாக இங்கிருக்கும் ஒருவருக்கு அதிகாரமளித்து அந்த நோட்டுகளை உங்கள் வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்யலாம். உங்களால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் உரிய கடிதம் மற்றும் அடையாளச் சான்றாவணத்துடன் (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம்,

வாக்காளர் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, NREGA அட்டை, வருமானவரிக் கணக்கு எண் (PAN) அட்டை, அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட பணியாளர் அடையாள அட்டைகள்) நேரில் வங்கிக்கு வந்து நோட்டுகளை டெபாசிட் செய்யவேண்டும்.

**21. நான் ஒரு வெளிநாடு வாழ் இந்தியர், எனக்கு NRO கணக்கு உள்ளது. இந்த குறிப்பிட்ட நோட்டுகளின் மதிப்பு என்னுடைய கணக்கில் வரவு வைக்கப்படலாமா?**

ஆம். குறிப்பிட்ட வங்கி நோட்டுகளை உங்களின் NRO கணக்கில் வரவுவைக்கலாம்.

**22. நான் ஒரு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணி. என்னிடம் இந்த நோட்டுகள் உள்ளன. நான் என்ன செய்யவேண்டும்?**

இந்தக் குறிப்பிட் நோட்டுகளைப் பயன்படுத்தி ரூ. 5000 வரை அந்நிய செலாவணியை விமானிலையத்திலுள்ள பணமாற்று முகப்புகளில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 72 மணி நேரத்திற்குள் மாற்றிப் பெறலாம். ஆனால், இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வாங்கியதற்கான சான்றாவணத்தை நீங்கள் காட்டவேண்டும்.

**23. எனக்கு அவசரத் தேவைக் (மருத்துவமனை, பயணம், உயிர்காக்கும் மருந்துகள்)காகப் பணம் தேவைப்படுகிறது. நான் என்ன செய்யவேண்டும்?**

அரசு மருத்துவமனைகளில் மருத்துவமனைக் கட்டணத்தை இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளைப் பயன்படுத்தி செலுத்தலாம். பேருந்துக் கட்டணம் (அரசுப் பேருந்துகள்) அல்லது பொதுத்துறை பேருந்துக் கட்டணங்கள், ரயில் கட்டணம், ஆகாய விமானப் பயணச்சீட்டு ஆகியவற்றை, அறிவிப்பு வெளியான பின் 72 மணிநேரத்திற்குள் இந்த நோட்டுகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**24. அடையாளச் சான்றாவணம் என்பது என்ன?**

ஏற்கப்படும் அடையாளச் சான்றாவணம் என்பது பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம். ஆதார், ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, கடவுச் சீட்டு, NREGA அட்டை, அரசுத்துறை அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் தத்தம் பணியாளர்களுக்கு வழங்கும் அடையாள அட்டைகள்.

**25. எங்கே இந்தத் திட்டம் குறித்து அதிக விவரங்கள் கிடைக்கும்?**

இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளமான www.rbi.org.in மற்றும் மத்திய அரசின் இணையதளம்.

**26. எனக்கு இதில் ஏதாவது பிரச்சினை என்றால், யாரை அணுகலாம்?**

இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு அறையை மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி எண்கள் **022-22602201 / 022-22602944** மூலம் தொடர்புகொள்ளலாம்.